ISSN 0975 - 6973

Volume - 9

November - 2017

**FACET 2K17**

# ANNUAL JOURNAL OF RESEARCH

FATIMA COLLEGE
LEAD KINDLY LIGHT
MADURAI

## RESEARCH DEPARTMENTS

( Commerce, Economics, English & Tamil )

## FATIMA COLLEGE (Autonomous)

( College with potential for Excellence)

(Re-Accredited with 'A' Grade by NAAC )

National Level 27th Rank-NIRF 2017

Mary Land, Madurai - 18.



# Contents


| S.No | | Page No |
|---|---|---|
| 12. | PHASE OF PATRIARCHY IN CHIKA UNIGWE'S *ON BLACK SISTERS' STREET* AND SEFI ATTA'S *EVERYTHING GOOD WILL COME*<br>**DR.G.PRIYA & MARIYA STEPHY.K** | 163 |
| 13. | TRAUMA AND RECOVERY IN SHYAM SELVADURAI'S *FUNNY BOY* AND NIROMI DE SOYZA'S *TAMIL TIGRESS*<br>**DR.S.SAIRA BANU & SNEHA GEORGE** | 173 |
| 14. | HELON HABILA'S *OIL ON WATER* AND TANURE OJAIDE'S *THE ACTIVIST* A STUDY OF ECO-IMPERIALISM<br>**Dr.MARY MAGDALENE & SELVA JEEVA.M** | 183 |
| 15. | RECLAIMING IDENTITY THROUGH RECONNECTION WITH NATURE IN LINDA HOGAN'S *POWER* AND *SOLAR STORMS*<br>**Dr.A.ROSELIN MARY & VIJAYA VASUKI.S** | 193 |
| 16. | FINDING THE LOST RHYTHM OF LIFE-A QUEST FOR IDENTITY IN SHAILA ABDULLAH'S *SAFFRON DREAMS* AND NAFISA HAJI'S *THE WRITING ON MY FOREHEAD*<br>**DR.S.SAIRA BANU & SINTHIYA.B** | 205 |
| 17. | DISPLACEMENT AND BELONGING IN *THE SECRET RIVER* AND *THE LIEUTENANT* BY KATE GRENVILLE<br>**Dr.S.SAIRA BANU & SHENSHIYA J.A DHAS** | 215 |
| 18. | DAVID KLASS'S THE CARETAKER TRILOGY: *FIRESTORM, WHIRLWIND AND TIMELOCK* : A STUDY OF ECO-TERRORISM<br>**Dr.MARY MAGDALENE & MERCY.S** | 223 |
| 19. | SYMBOLIC INTERACTIONISM IN THE SELECT NOVELS OF NADIA HASHIMI<br>**Dr.S.J.KALA & PRIYADHARSHINI.K** | 231 |
| 20. | திலகவதி நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள்<br>**முனைவர் சி. சொர்ணமாலா & சே. மெர்லின் மேரி** | 241 |
| 21. | ஐங்குறுநூற்றில் உயிரியல்<br>**முனைவர் க. லதா & மு. கற்பகவள்ளி** | 253 |
| 22. | அகப்பாடல்களில் செலவழுங்கலும் செலவழுங்குவித்தலும்<br>**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி & ர. சங்கீதா** | 267 |
| 23. | பரிபாடலில் கலைகள்<br>**முனைவர் நா. ரேணுகா & சி. சத்யா** | 279 |

# அகப்பாடல்களில் செலவழுங்கலும் செலவழுங்குவித்தலும்

நெறியாளர்
**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி,**
பாத்திமா கல்லூரி,
மதுரை

ஆய்வாளர்
**ர. சங்கீதா**

**முன்னுரை**

பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியம் அக்கால மாந்தர்களின் அகவாழ்வையும் புறவாழ்வையும் தெளிவாகப் புலப்படுத்தும் ஒரு காலக்கண்ணாடியாகத் திகழ்கின்றது. அகமாந்தர்களின் காதல் வாழ்வு தொடர்பான, உணர்வுகளையும் எண்ணங்களையும் கூறுபவையாகவும் காதல் நிகழ்வுகளைத் தெரிவிப்பவையாகவும் அமைகின்றது. காதலர்களின் களவு வாழ்வு தொடங்கிக் கற்பு வாழ்வு வரையிலான செய்திகளை எடுத்துரைக்கின்றது. சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகையிலுள்ள நற்றிணையில் 24 பாடல்களும், குறுந்தொகையில் 12 பாடல்களும, ஐங்குறுநூற்றில் 10 பாடல்களும், கலித்தொகையில் 15 பாடல்களும், அகநானூற்றில் 25 பாடல்களும் ஆக மொத்தம் 86 பாடல்கள் செலவழுங்கல் மற்றும் செலவழுங்குவித்தல் ஆகிய துறைகளில் அமைந்துள்ளன.

**அகம்**

" உள்ளமும் உடலும் இரண்டுறவும் இரண்டுஅறவும் கலந்த இன்பச் செவ்வியே அகம்" என்பர். அகம் என்பதை, மனத்தளவில் உய்த்துணரக் கிடக்கும் உணர்வு என்றும் உள்ளம் நுகரும் பொருள் என்றும் உணர்ந்தவாறே கூற இயலாத தன்மை கொண்டது என்றும் கூறலாம். இதன் அடிப்படையில், ஊழ்வினையால், ஒருவனும் ஒருத்தியும் கூடி, மகிழ்ந்து வாழும், காதலாகிய களவு வாழ்வையும் மணம்புரிந்து கொண்டு இல்லறத்தில் வாழும் கற்பு வாழ்வையும் வெளிப்படையாக உணர்த்த முடியாத, பகிர்ந்து கொள்ள முடியாத மன உணர்வுகளையும் அகம் என்கின்றனர்.

1. தி. கலையரசி, இலக்கணம் காட்டும் வாழ்வு, ப.2